பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
04 06 2025 7 15
புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மணிப்பூர் மாநிலத்தில் மழை வெள்ள பாதிப்புகளை எதிர்கொள்ள தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு வழங்கும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. கேரள ரயில்வே திட்டங்களுக்கு இந்த ஆண்டு 3 ஆயிரத்து 42 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக ரயில்வே அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

3. அறிவியல் ஆராய்ச்சிகளை முன்னெடுத்துச் சென்று நீடித்த வளர்ச்சியை ஏற்படுத்த மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாக கப்பல் துறை அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால் தெரிவித்துள்ளார்.

4. தென்கொரியாவின் புதிய அதிபராக **Lee Jae-Myung** தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

5. நார்வே செஸ் போட்டியின் 8வது சுற்றில் இந்தியாவின் அர்ஜுன் எரிகேசி வெற்றி பெற்றுள்ளார்.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

மணிப்பூர் மாநிலத்தில் மழை வெள்ள பாதிப்புகளை எதிர்கொள்ள தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு வழங்கும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

அம்மாநில மழை நிலவரம் குறித்து ஆளுநர் திரு. அஜய் குமார் பல்லாவைத் தொடர்புகொண்டு பேசிய பிரதமர் இந்த உறுதியை அளித்துள்ளார்.

மாநிலத்தில் மழை பாதிப்பு காரணமாக சுமார் 35 ஆயிரம் வீடுகள் சேதமடைந்துள்ளதாகவும், பாதிக்கப்பட்ட மக்கள் 81 நிவாரண முகாமகளில் தங்க வைக்கப்பட்டிருப்பதாகவும் ஆளுநர், பிரதமரிடம் எடுத்துரைத்துள்ளார்.

மத்திய-மாநில பேரிடர் மீட்புப் படையினர், காவல்துறை, தீயணைப்புத்துறை, துணை ராணுவப் படை மற்றும் செஞ்சிலுவை சங்கத்தினர் வெள்ளம் பாதித்த பகுதிகளில் நிவாரணப் பணியில் ஈடுபட்டுள்ளதாகவும் ஆளுநர் பிரதமரிடம் தெரிவித்துள்ளார்.

இதனிடையே மணிப்பூரில் இன்று மழையளவு குறையக்கூடும் என வானிலை மையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

கேரள ரயில்வே திட்டங்களுக்கு இந்த ஆண்டு 3 ஆயிரத்து 42 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக ரயில்வே அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

இது தொடர்பாக கேரள முதலமைச்சர் திரு. பினராயி விஜயனுடன் ஆலோசனை நடத்திய அவர், அங்கமாலி – எருமேலி புதிய ரயில்வே திட்டத்திற்கு தேவையான நிலம் கையகப்படுத்துதல் மற்றும் ரயில்வே மேம்பாலங்கள், சுரங்கப் பாதை திட்டங்களை செயல்படுத்த மாநில அரசின் ஒத்துழைப்பை கோரியதாக தமது சமூக வலைதளப் பதிவில் தெரிவித்துள்ளார்.

மேலும் கேரளாவின் வடக்கு மற்றும் தெற்குப் பகுதிகளிடையே மூன்றாவது மற்றும் 4வது ரயில் பாதைகளை அமைக்க ரயில்வே அமைச்சகம் நடவடிக்கை எடுத்து வருவதாகவும், இதன் மூலம் சரக்கு மற்றும் பயணிகள் போக்குவரத்து மேம்படும் என்றும் திரு. அஸ்வினி வைஷ்ணவ் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

அறிவியல் ஆராய்ச்சிகளை முன்னெடுத்துச் சென்று நீடித்த வளர்ச்சியை ஏற்படுத்த மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாக துறைமுகங்கள் மற்றும் கப்பல் துறை அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால் தெரிவித்துள்ளார்.

நாட்டின் முதலாவது துருவ ஆராய்ச்சி கப்பல் கட்டுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம், இந்தியா – நார்வே கப்பல் கட்டும் நிறுவனங்களுக்கு இடையே **Oslo**-வில் கையெழுத்தானது.

இந்த நிகழ்ச்சியில் பேசிய திரு. சர்பானந்த சோனோவால், இந்த ஒப்பந்தம் நம்பிக்கை மற்றும் முன்னேற்றத்தின் அடையாளமாக திகழும் என்றார்.

புதிதாக கட்டப்படும் ஆராய்ச்சிக் கப்பல் மூலம் புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் துரப்பன பணிகள் மேற்கொள்ளப்படுவதுடன், வருங்கால தலைமுறையினரை ஈர்க்கும் வகையிலான சர்வதேச ஒத்துழைப்புகளுக்கு வழிவகுக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

கடலுக்கு அடியில் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் வகையில் அதிநவீன அறிவியல் சாதனங்கள் இந்தக் கப்பலில் பொருத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த ஆராய்ச்சியின் மூலம் இந்தியாவின் கடந்த கால, தற்கால மற்றும் வருங்காலம் குறித்த அரிய தகவல்களை அறிந்துகொள்ள முடியும் என்றும் திரு. சர்பானந்த சோனோவால் தெரிவித்தார்.

<<<<>>>>

தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் நடவடிக்கைகளுக்கு ஆதரவு தெரிவித்த இங்கிலாந்து அரசுக்கு வெளியுறவுத்துறை செயலாளர் திரு. விக்ரம் மிஸ்ரி பாராட்டு தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற இந்தியா-இங்கிலாந்து இடையிலான ஏற்றுமதி மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு குறித்த கூட்டத்தின் இடையே, இங்கிலாந்து வெளியுறவுத்துறை உதவி செயலாளர் திரு. **Oliver Robbins** உடன் திரு. விக்ரம் மிஸ்ரி பேச்சுவார்த்தை நடத்தினார்.

பின்னர் வெளியுறவுத்துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், வர்த்தகம், பாதுகாப்பு, சுகாதாரம் உள்ளிட்ட துறைகளில் இந்தியா-இங்கிலாந்து இடையிலான இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இரு நாடுகளுக்கு இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தப் பேச்சுவார்த்தை நிறைவடைந்திருப்பதையும் இரு நாடுகளும் வரவேற்பதாகவும் அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

<<<<>>>>

ஆபரேஷன் சிந்துார் பற்றி உலக நாடுகளிடம் எடுத்துரைப்பதற்காக அமைக்கப்பட்ட நாடாளுமன்ற அனைத்துக் கட்சிக் குழுவினர், வெளிநாடுகளில் தங்களது பயணத்தை முடித்துக்கொண்டு தாயகம் திரும்பி வருகின்றனர்.

ரஷ்யா, ஸ்பெயின் உள்ளிட்ட நாடுகளுக்குச் சென்ற குழுவின் தலைவரான திமுக உறுப்பினர் திருமதி கனிமொழி நேற்று சென்னை திரும்பிய நிலையில், பிஜேபி உறுப்பினர் திரு. பைஜெயந்த் பாண்டா மற்றும் ஐக்கிய ஜனதா தளத்தின் திரு. சஞ்சய் குமார் ஜா தலைமையிலான குழுவினர் புதுதில்லி திரும்பினர்.

பின்னர் திரு. பைஜெயந்த் பாண்டா, வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கரை சந்தித்து சவுதி அரேபியா, குவைத், பஹ்ரைன் மற்றும் அல்ஜீரியா நாடுகளில் தாங்கள் மேற்கொண்ட பயணம் குறித்து எடுத்துரைத்தார்.

அப்போது நாடாளுமன்ற குழுக்களை அனுப்பியதன் நோக்கம் நிறைவேறியதற்காக திரு. ஜெய்சங்கர் பாராட்டு தெரிவித்ததாக இக்குழுவின் இடம்பெற்ற வெளியுறவுத்துறை முன்னாள் செயலாளர் திரு. ஹர்ஷ்வர்தன் ஷ்ரிங்லா பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

<<<<>>>>

இனி . . .

ஆபரேஷன் சிந்தூரின் வெற்றியைக் கொண்டாடும் வகையில், சாதனை படைத்த பாதுகாப்புப் படையினரின் சிறப்பைப் போற்றும் வகையிலான செய்தித் தொகுப்பு…

**(Sound Byte – Music – 12 Sec)**

இதில் இன்று இடம்பெறுகிறது பரம்வீர் சக்ரா விருது பெற்ற **Second Lieutenant –Rama Raghoba Rane** குறித்த வீரதீர சாதனைகள்…

**(Voice Over / Closing Music – 80 Sec)**

<<<<>>>>

தமிழக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின், மொழியை வைத்து அரசியல் செய்வதாக பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

திண்டுக்கல்லில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பல்வேறு திட்டங்களுக்குத் தேவையான நிதியை மத்திய அரசிடம் இருந்து பெறுவதில் முதலமைச்சர் கவனம் செலுத்த வேண்டும் என்றார்.

தமிழகத்தில் நிகழ்ந்த பாலியல் குற்றங்கள் தொடர்பான அனைத்து வழக்குகளையும் விரைந்து விசாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

முன்னதாக மதுரை மாவட்டம் மேலூரில் செய்தியாளர்களிம் பேசிய திரு. நயினார் நாகேந்திரன், வரும் தேர்தலில் திமுக ஆட்சியை அகற்ற தேமுதிக உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளும் ஓரணியாக திரள வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

தென்கொரியாவின் புதிய அதிபராக திரு. **Lee Jae-Myung** தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

இத்தேர்தலில் பதிவான வாக்குகளில் அவர், தற்போதைய ஆளும் கட்சியான கன்சர்வேடிவ் மக்கள் அதிகாரம் கட்சியின் திரு. **Kim Moon – Soo**-ஐ விட 20 லட்சம் வாக்குகள் முன்னிலை பெற்றுள்ளார்.

ராணுவ சட்டம் தொடர்பான சர்ச்சை காரணமாக முந்தைய அதிபர் பதவி விலகியதால் தென்கொரியாவில் நிலவி வந்த அரசியல் நிச்சயமற்ற தன்மைக்கு, இத்தேர்தல் மூலம் தீர்வு காணப்பட்டுள்ளதாக உலக நாடுகள் தெரிவித்துள்ளன.

<<<<>>>>

ஹஜ் புனித யாத்திரை மக்கா நகரில் இன்று தொடங்குகிறது.

பக்ரீத் பண்டிகையை ஒட்டி நடத்தப்படும் இந்த புனித பயணத்தில் இந்தியா உட்பட உலகெங்கிலும் உள்ள இஸ்லாமியர்கள் பங்கேற்று மெக்காவில் இருந்து சவுதி அரேபியாவின் மினா நகருக்கு பயணம் செய்து சிறப்பு தொழுகை மேற்கொள்கின்றனர்.

<<<<>>>>

நார்வே செஸ் போட்டியின் 8வது சுற்றில் இந்தியாவின் அர்ஜுன் எரிகேசி, அமெரிக்காவின் **Fabiano Caruana**-ஐ வீழ்த்தி வெற்றி பெற்றார்.

மற்றொரு ஆட்டத்தில் குகேஷ், அமெரிக்க வீரரிடம் தோல்வியடைந்தார்.

மகளிர் பிரிவில் இந்தியாவின் வைஷாலி, நடப்பு உலகச் சாம்பியனான சீனாவின் **Ju Wenjun**-ஐ வீழ்த்தி வெற்றி பெற்றார்.

------------

ஐ.பி.எல். கிரிக்கெட் இறுதிப் போட்டியில் பெங்களூரு அணி 6 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்று முதல் முறையாக கோப்பையைக் கைப்பற்றியுள்ளது.

அகமதாபாதில் பஞ்சாப் அணிக்கு எதிராக நேற்று நடைபெற்ற இப்போட்டியில் முதலில் விளையாடிய பெங்களூரு அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 9 விக்கெட் இழப்புக்கு 190 ரன் எடுத்தது.

அதிகபட்சமாக விராட் கோலி 43 ரன் எடுத்தார்.

--------------

**FIFA** சர்வதேச நட்புறவு கால்பந்துப் போட்டியில் இந்தியா இன்று தாய்லாந்தை எதிர்கொள்கிறது.

இப்போட்டி மாலை 6 மணிக்கு தாய்லாந்தில் நடைபெறுகிறது.

**<<<<The End>>>>**